# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித் தாளாகப் பதிவு பெற்றது)


> எல்லோரிடமும் சாந்தமாயும், உன்னிடம் கண்டிப்பாயும் இரு.
>
> * *
>
> எல்லோரிடமும் மிதமான மகிழ்ச்சியோடு பேசு.
>
> * * *
>
> எதையும் மிகைப்படுத்திக் கூருதே; உன் எண்ணத்தை நிதானத்தோடு தெரிவி.
>
> — புனித அவிலா தெரேசா


96-ம் புத். | 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 35-ம் இல


## கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையில் ஒரு பெரும் முன்னேற்றம்

மூன்று வருடங்களுக்கு முன் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரும் அங்கிளிக்கன் சபைத்தலைவர் டக்டர் ரும்சே அவர்களும் சந்தித்து ஆலோசித்ததன்பயனுக, இரு பகுதியினருமடங்கிய சர்வதேச ஆராய்வுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஒற்றுமைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் சகல கருமங்களையும் ஆராய்வதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டதை நாம் முன் அறிந்திருக்கிறோம். இக்குழுவினர் அயராது உழைத்து வந்ததன்பயனுக பலமுட்டுக்கட்டைகள் ஏற்கனவே அகற்றப்பட்டன. சென்றவாரம் நமக்குக்கிடைத்திருக்கும் செய்தி ஒற்றுமையின் சித்தியில் பெரும் நம்பிக்கை தருவதாக இருக்கின்றது. கத்தோலிக்க விசுவாசத்தில் மிகமுக்கியமான தேவநற்கருணை விஷயமான திருச்சபையின் படிப்பினைகளில் இருபகுதியினரும் கிட்டத்தட்ட ஒற்றுமை கண்டுவிட்டனர். இவர்களது ஆராய்வுகள் இருபகுதியினதும் உயர் அதிகார பீடங்களுக்கு அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கிளிக்கன்சபை அங்கத்தினரின் தலைவராகிய டக்டர் மூர்மன் இந்நிகழ்ச்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறியிருக்கிறார். சற்பிரசாத விசுவாசத்தில் ஒற்றுமை ஏற்படுமாயின் மறு விஷயங்களில் ஒற்றுமை காண்பது இலகுவாகவே இருக்கும்.

## உலக ஆயர் சினோட்டில் இலங்கைப் பிரதிநிதி

வருகிற மாதம் வத்திக்கானில் நடக்க இருக்கும் உலக ஆயர் சினோட்டில் இலங்கை மேற்றிராணிமாரின் ஏகபிரதிநிதியாகக் கருதினல் கூறே அடிகளார் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். அவர் இம்மாத இறுதியில் ரோமாபுரிக்குப் புறப்படுவார். அங்கு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் பலவிஷயங்களுள் நீதிக்கும் சமாதானத்திக்கும் முதலிடம் கொடுக்கும்படியாக கொழும்புப் பிரிவுக் குருமார் அவருக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். இந்தியமேற்றிராணிமார் சபையின் சார்பாக வங்காள தேசத்திலே நடைபெறும் அநீதிகளை அம்பலப்படுத்தும்படியாகவும் உலகதர்மஸ்தாபன உதவிகளை அத்தேச அகதிகளுக்குப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்யும்படியாகவும் அவர்கேட்கப்பட்டிருக்கிறார்.

## அமெரிக்க கத். திருச்சபை

ஐக்கிய அமெரிக்க தேசத்தின் 1971 ஆம் ஆண்டுக்குரிய அதிகாரபூர்வமான திருச்சபைப்புள்ளிவிபர வெளியீட்டின்படி, சென்றவருடம் அத்தேச கத்தோலிக்க சனத்தொகை 3,42,640 பேராலே அதிகரித்து 4,82,14,749பேராகியிருக்கிறது. அதாவது அத்தேச முழுச்சனத்தொகையின் 23 5சத விகிதமானோர் கத்தோலிக்கராவர். 1969 ஆம் ஆண்டைக் காட்டிலும் சென்ற 1970 ஆம் ஆண்டிலே அங்கு கன்னியாஸ்திரிமார் தொகை 7,000 பேராலும், குருத்துவமாணவர் தொகை 3,000 பேராலும், குருமார் தொகை1,031 பேராலும குறைந்திருக்கிறது.

## முற்போக்குவாதிகளுமில்லை பிற்போக்குவாதிகளுமில்லை

ஐக்கிய அமெரிக்கதேச அதிமேற்றிராணிமார்களில் ஒருவராகிய ஷீலன் அடிகளார் அண்மையில் நியூயோக் நகர மகா தேவாலய மன்றத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் திருச்சபை அதிகாரிகளிற் சிலரை முற்போக்கு வாதிகளென்றும், சிலரைப் பிற்போக்குவாதிகளென்றும் வேற்றுமை காட்டி மக்கள் குறிப்பிடும் போக்கை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இப்படிக் கூறிவருவதினுல் ஏதோ திருச்சபை அதிகாரிகளில் பெருப்பிரிவு ஏற்பட்டிருப்பதாகச் சிலர் அபிப்பிராயம் கொள்கின்றனர். உண்மையில் திருச்சபை அதிகாரிகள் யாவரும் ஒருமனப்பான்மை கொண்டு யேசுநாதரின் சுவிசேஷத்தைப் போதித்து வருகின்றார்கள் என்பதே பிரதானமானதாகும்.

## முஜீப் றஹ்மன் பற்றி உலக கிறிஸ்தவ சபைகளின் விண்ணப்பம்

உலக கிறீஸ்தவசபைகளின் பொதுக் காரியதரிசியாகிய டக்டர் கார்சன் பிளேக் அவர்கள் பாக்கிஸ்தான் ஜனுதிபதியாகிய யாஃயா கான் அவர்களுக்குக் கிறீஸ்தவ சபைகளின் சார்பில் அனுப்பியிருக்கும் விண்ணப்பத்தில் கிழக்குப் பாக்கிஸ்தான் தலைவர் முஜீப் றஹ்மன் அவர்களை இரகசிய இராணுவ நீதிமன்றத்தினுல் விசாரணை செய்யப்படுவது அகில உலகிலும் பீதியை உண்டாக்கி யிருக்கிறதென்றும் இதன் விளைவாக உலக சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படக் கூடுமென்றும் கூறி, இதைத் தவிர்க்க வழிவகைகள் எடுக்குமாறும் விண்ணப்பித் திருக்கின்றார்.

## கோருனைப் படிப்பிக்கும் கத்தோலிக்க குரு

மைக்கல் பிற்ஸ் ஜெரால்ட் சுவாமியார் யுகண்டா தேசத்துக்குத் திருத்தொண்டாற்றப் போனபோது இஸ்லாமிய மதநூலாகிய கோருனைப் படிப்பிக்குமநிலைமை தனக்கு வருமெனஎதிர்பார்க்கவில்லை. ஆனுல் அவ்வேலையை இன்று மனச் சந்தோஷத்தோடு செய்து வருகின்றார். யுகண்டாதேச மக்கறேறெ எனும் சர்வகலாசாலையில் அவர் சமயங்களின் ஒப்புவமைக் கலை ஆசிரியராக நியமனம்பெற்றிருப்பதால் கிறீஸ்தவ விவிலிய நூலையும், கோருனையும கற்று அவற்றிலுள்ள ஒப்புவமைகளைப் போதிக்கும கடமை அவருடையதாகின்றது. கோருனின் உயர் போதனைகளையும், பண்பாட்டையும் அவர் பாராட்டி வருகின்றார்

## சந்தியாகோ திருசேத்திரத்தில் ஜெனறல் பிருங்கோ

அப்போஸ்தலரான புனித சந்தியாகப்பரின் புனித வருடத்தைக் கொண்டாடு மூகமாக ஸ்பானியதேச சந்தியாகோ தே கொம்போஸ்ரெலா நகரில் சென்ற ஆடி மாதம் 25 ஆம் தேதி ஞாயிறன்று குழுமியிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் அனைவரும், ஸ்பானிய அரசாங்க தலைவரான ஜெனறல் பிறுங்கோவும், அவரின் பாரியாரும் அங்கு சமுகமளித்தபோது ஆனந்த கோஷஞ்செய்து அவர்களை நல்வரவேற்ருர்கள். இருவரும் சந்தியாகப்பரின் திருசேத்திரத்தில் கௌரவமான ஆசனங்களை வகுத்திருந்தார்கள். ஜெனறல் பிறுங்கோ வெண்மையான இராணுவ உடை அணிந்தவராய், 78வயதுடையவராயிருந்தும்இளமையுடையவராய்க் காட்சியளித்து விசுவாசிகளின் செபங்களை வாசித்தார்.

ஸ்பானிய தேசத்திலுள்ள பாப்பரசரின் ஸ்தானிகரும், சறகோஸு நகரின் அதிமேற்றிராணியாரான கொம்பெஸ்ரெலாவின் சொந்தக் கருதினுலும்,ஸ்பெயினிலிருந்தும்,பிற நாடுகளிலிருந்தும் போன சுமார் 40மேற்றிராணிமாரும் திருநாளுக்குச் சமுகமளித்திருந்தார்கள். சந்தியாகப்பரின் புனிதஉடல் அடக்கம் செய்யப் பெற்றுள்ள சந்தியாகோநகருக்கு இதுஒரு புனித வருடமாகும். ஸ்பானியதேச பாதுகாவலரான அவர் திருநாள் ஒரு ஞாயிற்றுக் கிழமையிலே வரும்போது, அஃது ஒரு புனிதவருடமாகும். அங்குள்ள அவரின் திருசேத்திரமானது ரோமாபுரிக்கும்,ஜெருசலேம் நகருக்கும் பின்கிறிஸ்த உலகின் முக்கியமான மூன்றுவது பெரிய யாத்திரைத் தலமாகப் பாப்பரசர்களால் அங்கிகரிக்கப் பட்டதாகும்.

புனித பிரான்சிஸ் அசிசியார்போலும் மத்திய நூற்ருண்டுகால புனிதர்களும் மற்றும் பிரமுகர்களும இத்திருசேத்திரத்தைத் தரிசித்திருக்கிருர்கள். இத்திருநாளின் போது அத்திருசேத்திரத்துக்கு யாத்திரைசெய்த பிரித்தானிய யாத்திரைக் கோஷ்டியில், அங்கு கென்ரன்நகர அங்கிளிக்கன் சபை விக்காரானகனம். ரொனுல்ட் பறன் அவர்களின் தலைமையில் சென்ற 22 அங்கிளிக்கன் கிறிஸ்தவர்களும், சுயாதீனசபையைச் சேர்ந்த புரொட்டஸ்தாந்த கிறிஸ்தவர்களும் அடங்கியிருந்தார்கள்.

## இருசிறுமிகள் உலகபிரமிப்பை ஆக்குகின்றனர்

ஸ்கொத்திலாந்து தேசச் சிறுமி, 6 வயது நிரம்பிய பிறுன்செஸ் பேர்ன்ஸ், பல வருடகாலமாக ஓர் மோட்டோர் விபத்தின் காரணமாய் நடக்கமுடியாதிருந்ததும், அண்மையில் ஊர்துகெபித் தடாகத்தில் அவள் உடம்பு நனைக்கப்பட்டதன் காரணமாக பூரண சுகமடைந்ததும் இருவாரங்களின்முன் பத்திரிகைகளில் வாசித்தறிந்து பிரமிப்படைந்தோம். இது போன்ற வேறும் ஒரு சமபவம் அவுஸ்திரேலியாவில் நடந்திருக்கின்றது. சென்ற வருட இறுதியில் சிட்னிநகருக்கு பரிசுத்த தந்தை 6வது சின்னப்ப பாப்பரசர் விஜயம் செய்திருந்தாரல்லவா? அத்தருணம் அவர் சிறுவர் வைத்தியசாலை ஒன்றுக்குச்சென்று அங்குள்ள சிறுவர்களை ஆசீர்வதித்தருளினுர். அவர் ஆசீர்வாதம்பெற்ற சிறுமிகளில் ஒருத்தி, டையன் பிறெனன் என்பவள், அன்று அவள் நடக்கமுடியாத நொண்டியாக இருந்தாள். பரி. தந்தையின் ஆசீர்வாதத்தைப் பெற்ற அன்றுதொடக்கமாக குணமடைந்து இன்று பூரண சுகமடைந்தவளாக சிட்னி நகரில் உலாவி வருகின்றுள். இவ்விரு சிறுமிகளும் உலக பிரமிப்பை அண்மையில்உண்டாக்கி விட்டனர்என்றேகூறலாம்.

## அமலோற்பவ தியாகிகளின் புதுப்பித்தல் திட்டம்

தற்கால வேலைகளுக்குத் தமது சபையினரைத் தயார் செய்யும் விசேஷ நோக்கத்துடன் அமலோற்பவ தியாகிகள் சபையினரின் அகில உலக பிரதிநிதிகளின்(சப்பர்) விசேஷகூட்டம் வருகிறவருடம் சித்திரைமாதம் ரோமாபுரியில் நடக்க இருக்கிறது. அதற்கு ஆயத்தங்கள் இலங்கையில் ஏற்கனவே தொடங்கிவிட்டன. அமலோற்பவ தியாகிகள் இத்தீவிற் தொண்டுசெய்யும் பகுதிகளிலுள்ள தேவைகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேஷகுழுவினர் தயார்செய்த அறிக்கைகளை நுணுக்கமாக ஆராய்ந்து தொகுப்பதற்கென 46 தியாகிகள் சபையினர் ஒன்றுகூடி ஆகவேண்டியனவற்றை செய்து முடித்துவிட்டனர்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்**

## குருப்பட்டப் பெருவிழா

15-9-71 புதன்கிழமை மாலை ஐந்துமணியளவில் திருமலை புனிதமரியாள் தேவாலயத்தில் மறைத்தொண்டர் அருளானந்தம் அவர்களின் குருத்துவப் பட்டமளிப்புவிழா திருப்பலிப் பூசையுடன் தொடங்கியது. தேவாலயமும் பலிபீடமும் வர்ணநிறப் பூக்களினாலும், ஒளி விளக்குகளாலும் பொலிவுற்றுத் திகழ்ந்தது.

குருக்கள் ஒருபுறம், பல கை மடத்துக் கன்னியர், சந்நியாசிகள் மறுபுறம், பொதுமக்கள் ஓர்புறமாக அமர்ந்திருந்தகாட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மாணபுமிகுஆயர் இக்னேசியஸ் கிளனி கதிரில் அமர்ந்திருக்க மாணபுமிகு துணை ஆயர் பி. தியோகுப்பிள்ளை, அருட்திரு வம்பேக் அடிகளார் அருகருகே நிற்க, கண்டி அம்பிட்டிய குருமட விரிவுரையாளர் அருட்திரு இராயப்பு அடிகளார் மறைத்தொண்டர் அருளானந்தம் அவர்களைக் குருப்பட்டத்திற் குரியசகலதகைமைகளும் உடையவரென ஆயர் அவர்கட்குச் சாட்சியம்சொன்னார்.

போரண்டவையவர்கள் குருத்துவத்திற்கு அமைந்தவாழ்வு நடாத்துதற்குரிய வாக்குறுதிகளை வழங்கியபின் தலையின் மீது கைகளை விரித்துவைத்துத் தூய ஆவியானவரின் அருளாசிர்களைப் பொழிந்து, உள்ளங்கையில் பரிமள தைலங்களைப் பூசி ஆசீர்வதித்து இறைவனின் திருக்குருவாக மாற்றியருளினார். இதன்பின் மாண்புமிகு ஆயர் இருவருடனும் திருப்பலியை நிறைவேற்றினார். பலி முடிந்ததும் புதுக் குருவின் திருக்கைகளை மக்கள் அனைவரும் உவகைப் பெருக்குடன் முத்தமிட்டார்கள்.

யாழ். இல்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைத்தொண்டர் அருளானந்தம் அவர்கள் திருமலை புனித மரியாள் தேவாலயப்பங்கின் துணைக் குருவாசகக்கடமையாற்றுவார். பரி. பாப்பரசர் 6-ம் சின்னப்பரின் இலங்கை வருகையின்போது நடைபெற்ற திவ்விய பலிபூசையில் தமிழில் நிருபம் வாசிக்கும்பேறு இவருக்குக் கிடைத்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏ. டபிள்யு. ஏ.**

---

## மறைக்கல்வி வகுப்புகள்

மறைக்கல்வி ஆசிரியர்களை உருவாக்கும் நோக்குடன் அச்சுவேலியை மத்தியதானமாகக் கொண்டு சென் நிரேசா பாடசாலையில் பருத்தித்துறை, கரவெட்டி, வசாவிளான், மயிலிட்டி, ஊறணி, பலாலி, உரும்பிராய் ஆகிய பகுதிகளிலிருந்து குழுமிய பெருந்தொகையான மக்களின் ஆர்வம்நிறைந்த ஆதரவுடன் 4-9-71இல் மேற்படி வகுப்பு மறைக்கல்வி இயக்குநர் தந்தை அதிவண. ஜி. ரி. பாலசுந்தரம், ஓ. எம். ஐ. அடிகள் தலைமையின்கீழ் ஆரம்பமாகியது. வகுப்புகளைச் சிறுநடத்திக்கொண்டு நடாத்துதற்காக குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் காலை 9மணிதொடக்கம் மாலை 4-30 மணிவரையும் வகுப்புகளை நடாத்துவதெனவும தீர்மானிக்கப்பட்டது.

நடந்த ஒவ்வொரு வகுப்புக்கும் 85பேர் சமுகமளித்திருந்தனர். விசேடமாகப் 18வயதுக்கும், 26வயதுக்குமிடைப்பட்ட க. பொ. த. பரீட்சையில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாரும் வகுப்புகளில் தொடர்பாகப் பங்குபற்றுவது விரும்பத்தக்கது. ஏறக்குறைய நூறுவகுப்புகள் வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. ஈற்றுக்க வகுப்புமுடிவில் நடைபெறும் மேற்றிராசனப்பரீட்சையில் சித்திபெறுவோர்க்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும். அவர்கள் தத்தம விசாரணைப் பங்குகளில் மறைக்கல்வி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு நற்செய்தி பரப்பும் நற்பணியில் மறைஆயருக்குப் பக்கபலமாக நின்று துணைபுரிவர்.

அப்போஸ்தொலிக்க தொண்டில் ஆர்வமுடைய இளைஞரான ஆண, பெண் அனைவரும இவ்வகுப்புகளில் பங்குகொள்ளும்முகமாகமறைக்கல்வி முதல்வருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

சகோதரி
ஸ்ரானிஸ்லாஸ் மேரி, ஏ. சி,
அச்சுவேலி.

---

## பிரிவுமலை எய்தினனே!

வச்சிரத்தூண் சரிந்ததுவோ!
வயிரமரம் முறிந்ததுவோ!
பச்சை மனம் பறந்ததுவோ!
பாகதியைத் திறந்ததுவோ!

உச்சகலை உறு குரவன்
உயர் ஞானப் பிரகாசன்
பிச்சை நிலை நாம் எடுக்கப்
பிரிவு மலை எய்தினனே!

பேச்சினிலே சிங்கம் என்பார்
கேட்டதில்லை; உபசரிக்கும்
மூச்சினிலே தங்கம் என்பார்
ஏட்டில் இதை மதுரைநின்று

எழுதிடவே எடுத்திட்
டேன்
எரி கண்ணீர்ப் பேனவை
எழுத்தெல்லாம் வழுக்கு
தம்மா
விழுதழுவே இழுக்குதம்மா

பரிவிரக்கம் பார்த்ததுண்டு
பளிங்குமுகம் கண்டதுண்டு
சொரிஅமுதச் சொற்குவியல்
சோர்வுய்யக் கொண்டதுண்டு

எதுவரினும் தாக்குகின்ற
இதய ஒலி நின்றதையோ!
எளிய அவர் வாழ்க்கை
முறை
"எனைப் போல்வாய்"
என்றதையோ!

"ஓய்வெடப்பா" என்று
சொன்னாய்
ஓய்வெடுக்கச் சென்று
விட்டாய்!
"போய்விட்டு, வா"
வென்றாய்

போய்விட்டாய் பொன்கரம்
வாய்விட்டு வாழ்த்தி"மகன்
வளர்ந்திடடா வாழ்க"
என்றாய்
தேய்வடையாச் சேதி
சொல்லித்
தேசனடி சேர்ந்தாயோ?

**நீ. மரியசேவியர்**

---

✠

## நெஞ்சம் மறப்பதில்லை!

திருமதி. ஜெய பாக்கியம் கோன்ஸ்ரன்ரைன்
அவர்களின்

## அமரதின நினைவு

13-11-1897 — 24-9-1967

அன்னையுந்தன் அரவணைப்பை
இவ்வுலகில் நாம் இழந்தே
ஆண்டோரிரெண்டுபோனதம்மா!
யாருமில்லை அவனியிலே
உன்னிடத்தை நிரப்புதற்கு;
உத்தமியுன் பாசமதை
உன்னியுன்னி உளம் நொந்தே
கண்ணீரை உகுக்கின்றோம்;
கனவினிலும் நனவினிலும்
காண்கின்ற அன்புமுகம்
காண்பதெப்போ? சொல்லம்மா?
கண்ணீர்தான் எஞ்சுவதோ?
மனதினிலே பொங்கிவரும்
துயர் என்றும் கூடுமல்லால்
மாதாசியுனை நெஞ்சம்
மறப்பதில்லை யெந்நாளும்!

அன்னவரை இழந்து துயருறும்:
அன்புக் கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

---

✠

அலெக்சாண்டர் மரியான்தம்பி
அவர்களின்

## 3-ம் வருட நினைவு தினம்

"ஜீவியத்தில் என்னை நேசித்த அன்பர்களே! மரணத்தில் என்னை மறவாதீர்கள்"

தோற்றம்: 29-8-1898. மறைவு: 27-9-1968.

மூவாண்டுகள் முடிந்திடினும்
முழுதாகத்
துன்பத்தில் துடித்து நாம்
துவள்கின்றோம்
நாவால் நின் தனிபெருமை
நாடறிய
நல்ல அப்பா நன்றியுடன்
நவில்வோமே
ஓவாதுயர் நோயிற்பணி
புரிந்தவுன்
செம்முகத்தை சேய்கள் கண்
காண்பதெப்போ
தேவாதி தேவனடி சேர்
நண்ணவுமே
நித்தபூசை நிமலபாதம்
பணிவோமே.

நிகழும் 27-ந்திகதி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலும், கரம்பன் செபஸ்தியார் ஆலயத்திலும் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் குருமார், சங். சந்நியாசர், கன்னியர் மற்றும் அன்பர்கள் இவரின் ஆன்மசாந்திக்காக மன்றாடும்படி வினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், உற்றார், உறவினர்.

உதய நிசை,
ஊர்காவற்றுறை. 162|71.

---

## நன்றித் துதி

யேசுவின் திரு இருதயத்தினாலும் வியாகுல மாதாவின் கருணையாலும் விசேஷமாக புனித செபஸ்தியாரின் மூலமும் வேண்டிக் கொண்டதினால் நான் தேவகருணையால் நற்சுகத்துடன் பிள்ளையைப் பிரசவித்தேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இவர்களுடைய புகழ் பன்மடங்கு புகழப்படுவதாக.

தெகிவளை ஓர் அடியாள்
104|71.

---

## சங். சகோதரி மேரி மக்டலின் பிரான்சீஸ் துரையப்பா

அறவற முதல்வாக்குத்தத்தம் வத்தளையில் உள்ள நாயக்கந்தை நல்லஆயன் பெரியமடத்தில் புரட்டாசிமாதம் 29-ந்தேதி காலை 8மணிபூசையில் எடுத்துக் கொள்ளுவார். இவர் யாழ்ப்பாணம் சஞ்சுவாம் கோவில் பங்கைச்சேர்ந்தவர். இவரை அறிந்த யாவரும் இவருக்காகச் செபிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர்.

---

✠

## அந்தோனி இம்மனுவேல் பேர்னண்டோவின் 6-ம் வருட மரண ஞாபகம்

தோற்றம்: 29-11-1902 மறைவு: 1-10-1965

இவரின் ஆன்மசாந்திக்காக மன்னார் அர்ச். செபஸ்தியார் ஆலயத்தில் எதிர்வரும் ஐப்பசித்திங்கள் 1-ந்தேதி வெள்ளிக்கிழமை காலை 5-45மணிக்கு ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். உறவினர், சிநேகிதர் இதில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மேரி மார்த்தம்மாள்
இ. பெர்னாண்டோ
மக்கள்: மேக்குலேற் தனற்று
இ. பெர்னாண்டோ
பமிலா பேப்புற்றவா
இ. பெர்னாண்டோ

மெயின் வீதி,
மன்னார்

---

## புத்தக கண்காட்சிக்கு கிறிஸ்தவ நூல்கள் தேவை

எதிர்வரும் ஐப்பசிமாதம் 1-ம், 2-ம் தேதிகளில் திருமலையில் நடைபெறும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான தமிழ்த்தின விழாவில் இடம்பெறும் புத்தகக் கண்காட்சியில் வைப்பதற்குப் பழைய கத்தோலிக்க-கிறிஸ்தவ சமயநூல்கள் தேவைப்படுகின்றன, சமய சம்பந்தமான பழைய நூல்களோ, ஏடுகளோவைத்திருப்பவர்கள் தயவுசெய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அனுப்பியவைகள்யாவும் பாதுபாப்பாகத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

தங்களிடம் உள்ளவற்றை அனுப்பி கிறிஸ்தவ நூற்பகுதிக்கென ஒதுக்கப்பட்ட கண்காட்சிப்பகுதி சிறப்புற நடைபெற உதவிபுரியுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
புலவர் அரியநாயகம்,
புனித சூசையப்பர் கல்லூரி,
திருகோணமலை.
அல்லது,
சங். சிஸ்டர் வேடலீன், ஏ. சி,
புனித மரியாள் கல்லூரி,
திருகோணமலை.

---

அணு, ஆயுதங்கள் எல்லாம் சமாதானத்தை அழிக்க அல்ல; ஆனால் சமாதானத்தைக்காக்க என்று கூறுது, "கத்தி ஒருவனைக் கொன்றுபோட அல்ல; ஆனால் அவனைச் சித்திரவதை செய்ய" என்பதைப் போன்றதாகும்.

— ஒரு ஐ. நா. ச. தூதுவர்

---

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம், 15-9-71.

யாழ் மேற்றிராசன

## வருடாந்த மறைக்கல்விப் பரீட்சை—1971.

அன்புள்ள பாடசாலைத் தலைவர்களுக்கு!

மேற்படி மறைக்கல்விப் பரீட்சை இவ்வாண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

தேசிய மறைக்கல்விக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் இவ்வருடம் 6, 7, 8, 9ஆம் வகுப்புகளுக்கு இலங்கையின் எல்லா மேற்றிராசனங்களிலும் பொதுப்பரீட்சை நடைபெறும். யாழ். மேற்றிராசனத்துக்குள்ளடங்கிய 4ஆம், 5ஆம் வகுப்புப்பிள்ளைகளுக்கு யாழ். மேற்றிராசன மறைக்கல்வி நடுநிலையம் இப்பரீட்சையை நடாத்தும்.

எனவே, தங்கள் பாடசாலையில் உள்ள 4, 5, 6, 7, 8, 9ஆம் வகுப்புக் கத்தோலிக்க பிள்ளைகளின் எண்ணிக்கையை மாத்திரம் தனித்தனியே குறித்து, 30-9-71-க்கு முன் எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

குறிக்கப்பட்ட வகுப்புகளில் அடங்கிய எல்லாக் கத்தோலிக்க பிள்ளைகளும் தவறாது இப்பரீட்சையில் பங்கு பெறுவது கடமையாகும்.

- 5ஆம் வகுப்புக்குரிய "நமது வழித்தொடர்ச்சி 4ஆம் பாகம் அச்சில் இருப்பதன் காரணமாக" அப்புத்தகத்தைத் தழுவிய பொதுவான கேள்விகளும், அன்பின் ஆட்சி 2ஆம் பாகத்திலிருந்தும், 5ஆம் வகுப்புக்குவினுக்கள் எடுக்கப்படும்.
- 9ஆம் வகுப்புக்கு அரசினர் பாடத்திட்டத்தின்படி திருமறை விளக்கம் 2ஆம் பாகத்திலிருந்தும், லூக்காஸ் சுவிசேஷம் முதல் எட்டு அதிகாரங்களிலிருந்தும் வினுக்கள் எடுக்கப்படும்.
- ஏனைய வகுப்புகளுக்கு 1971-ம் ஆண்டிற்கான கத்தோலிக்க திருமறைக்கல்வித் தமிழ்ப்பாட நூல்களிலிருந்து வினுக்கள் எடுக்கப்படும்.

இம்மாத முடிவுதொடக்கம் மாதிரி வினுக்கள் பாதுகாவலனில் தொடர்ந்து வெளிவரும். தங்களது ஒத்துழைப்பை வினயமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜி. ரி. பாலசுந்தரம், ஓ. எம். ஐ.
யாழ். மேற்றிராசன மறைக்கல்வி
ஆலோசகர்

# செய்திகள்

### ஐப்பசி 9ஆம் திகதி மாலே

வருகிற ஐப்பசிமாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை மாலே 5 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை சகலரும் தங்கள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். ஏனெனில், அன்றிரவே இலங்கையின் நூறுவது குடிசனக்கணக்கு எடுக்கப்படவிருக்கிறது இதற்கென நாட்டின் 22மாவட்டங்களிலும் நியமனஞ்செய்யப்பட்டுள்ள உதவிக்கணக்கெடுப்பு அதிகாரிகளின் தலைமையிலே சுமார் 50,000 கணக்கெடுப்பாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டு வருகிருர்கள்.

### உயர் அப்பீல் நீதி மன்றம்

தற்பொழுது லண்டன் பிறிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் 50. இவற்றிலே இரண்டு தவிர ஏனையவைகளெல்லாம் இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் உயர் அப்பீல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும். இவைகளைத் திரும்பவும் இங்கே தருவிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. பிறிவிக்கவுன்சிலும் அதற்கு உடன்பட்டிருக்கிறது. மற்றிரு வழக்குகளும் அங்கே விசாரணை செய்யப்படுவதற்கான கட்டணம் செலுத்தப்பட்டு, வழக்கறிஞர்களும் நியமிக்கப்பட்டு விட்டமையால் அவைகளை இங்கே தருவிக்க முடியாதிருக்கிறது.

### பாடசாலேகளுக்குப் பரிசுகள்

மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும் பாடசாலே வளர்ச்சியில் ஊக்கப்படுத்துமுகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தலேசிறந்து விளங்கும் ஒன்பது பாடசாலேகளுக்கு வருடக்தோறும் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. மார்கழிமாதம் நடைபெறும் ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் திறமையை அடிப்படையாகக் கொண்டு இப்பரிசுகள் வழங்கப்படும். அகில இலங்கையிலும் முதலிடம் பெறும் பாடசாலேக்குச் சிறப்புப் பரிசும் வழங்கப்படும்.

### பூக்கள் ஏற்றுமதி

ஜப்பானும் தற்போது இலங்கைப் பூக்களைக் கொள்வனவு செய்யத் தொடங்கியிருக்கிறது. அது வாரந்தோறும் 200பவுண் பெறுமதியான பூக்களைக் கொள்வனவு செய்யவிருக்கிறது. மேற்கு ஜேர்மனியும் முன்னிலும் கூடுதலான பூக்களுக்கு ஆடர்செய்யப்போகிறது.

### 50 லட்சம் புசல் நெல்

இம்முறை காலபோகத்தின் போது விவசாயிகளிடமிருந்து விவசாயப்பகுதி முக்கிய காலபோகத்தைக் காட்டிலும் 50 லட்சம் புசல்நெல் மேலதிகமாகவாங்கியுள்ளது. இம்முறை சென்ற ஆடிமாத இறுதிவரை வாங்கப்பட்டுள்ளநெல் 2கோடியே 10லட்சம் புசல். சென்றமுறை வாங்கியநெல் 1கோடியே 53லட்சம் புசல். இம்முறை நெல்உற்பத்தி எவ்வளவாக அதிகரித்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதற்களவாக அரிசிஇறக்குமதி குறைக்கப்பட விருக்கிறது.

### அவசரகால நிலேமை

நாட்டிலே காலப்போக்கில் நிலேமை சீரடைந்ததும் அவசரகால நிலேமை அகற்றப்படும்; அவசரகால நிலேமை அரசாங்கத்தைப் பொறுத்த ஒரு கருமம்; அது நீக்கப்படவேண்டுமா, இல்லேயா, என்பது அரசாங்கமே தீர்மானிக்கவேண்டிய ஒரு விஷயமென்று செனற்சபையில் நீதிமந்திரி தெரிவித்திருக்கின்ருர்.

### மேலதிக அசைஸ் கோடுகள்

விசாரணை செய்யப்படாமல் தேங்கிக்கிடக்கும் கிறிமினல் வழக்குகளை இவ்வருட முடிவிற்குள் விசாரணைசெய்து முடிப்பதற்கென்று அசைஸ் கமிஷனர்களென அறியப்படும் நீதியரசர்களின் தலைமையில் மேலதிகமான ஆறு சுப்பிறீங்கோடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

### விறகு வழங்கப்படமாட்டாது

வடமாகாணத்திலுள்ள தனிப்பட்டவர்களின் விறகுகாலேகளுக்கு வருகிற ஐப்பசி மாதமுதல் விறகு வழங்குவதில்லேயென அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் தீர்மானித்திருக்கிறது. அதனுல் தனிப்பட்ட விறகுகாலேகளுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் இந்த நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கும். ஆகவே, மரக்கூட்டுத்தாபனமே விறகுவிற்பனே செய்யும்.

### கல்வித்தரம் பிரிக்கும் வேலே

உயர்தர கல்விக்கென்று மாணவர்களைத் தரம்பிரிப்பது, ஆறும் வகுப்பிற்குப் பதில் ஒன்பதாம் வகுப்பிற்கு உயர்த்தப்படவிருக்கிறது. ஒன்பதாம் வகுப்புவரை மாணவர்கள் சகலரும் விஞ்ஞானம், வர்த்தகம், கலே ஆகிய துறைகளில் பயிலவேண்டும். இவ்விதம் பயிலும் மாணவர்கள் திறமைக்கேற்பப் பலவேறு துறைகளுக்கும் தரம் பிரித்து அந்தந்தத் துறையில் உயர்தர கல்விபெற அனுமதிக்கப்படுவார்கள்.

### அதிகமான நெல் விளைவு

கிளிநொச்சி, கணகபுரம், திருவையாறு முதலாம்இடங்களிலே இம்முறை சிறுபோக வேளாண்மையில் அதிகமான நெல் விளேந்திருக்கிறது. சென்றஆண்டின் சிறுபோகத்திலும் பார்க்க இம்முறை சுமார் 40 ஆயிரம்புசல் கூடுதலானநெல் விளேயுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பெற்ருேர் விரும்பினுல் மட்டும்

பெற்ருேர் விரும்பினுல் மட்டுமே வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலேகளுக்குச் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்; சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதுபற்றிய ஒரு தீர்க்கமுடிவைத் தமிழ்ப் பெற்ருேர்தான் எடுக்க வேண்டுமென்று கல்வி அமைச்சின் நிரந்தர செயலாளர் தெரிவித்திருக்கின்ருர்.

### அரிசிக் கப்பல்

"ஓசன் என்ரப் பிறைஸ்" எனும் கப்பல் பர்மாவிலிருந்து 10,630 தொன் அரிசி ஏற்றிக்கொண்டு சென்ற 7ஆம் திகதி பருத்தித்துறைமுகம் வந்து சேர்ந்து, மறுநாள் முதல் அதிலிருந்து அரிசி இறக்கப்படுகிறது. வழமையிலே இத்துறைமுகத்துக்குவரும் கப்பல்கள் அங்கிருந்து சுமார் 1,320 யார் தூரத்திலேயே நங்கூரமிட்டு நிற்கும். ஆனுல், இக்கப்பலோ துறைமுகத்திலிருந்து மேற்கே சுமார் இரண்டரைமைல் தூரத்தில் நங்கூரமிட்டுள்ளது.

### தேர்தல் அப்பீல்மனு

வட்டுக்கோட்டைத் தேர்தல் அப்பீல்மனு சென்ற 9ஆம் திகதியன்று மூன்று நீதியரசர்களைக் கொண்ட அப்பீல் நீதிமன்றத்தால் விசாரணை செய்து செலவு தொகையுடன் தள்ளப்பட்டது. இந்தத்தேர்தலே ஆட்சேபித்து முன்னர் செய்யபபட்ட ஆட்சேபமனுவை நீதியரசர் வி. சி. பண்டிதகுணவர்த்தன விசாரணை செய்து அதனைத் தள்ளித் தீர்ப்பளித்தார். இப்போது அத்தீர்ப்புக் கெதிராகச் செய்யப்பட்ட அப்பீலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### விவசாயப் பயிற்சி நிலேயம்

பலாலியிலுள்ள விவசாயப் பயிற்சி நிலேயம் மூடப்படமாட்டாது. அதற்குப் பதில் குளியாப்பிட்டியில் உள்ளது போன்று அது மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. அதனுல் யாழ்ப்பாணத் தொழில்நுட்ப கல்லூரியின் ஒரு பிரிவாக இருந்துவரும் பலாலி விவசாயபயிற்சி நிலேயத்தை மூடிவிட்டு, அதன் கட்டடங்களைப் பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலேயுடன் இணைக்க எடுக்கபட்ட நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

### பம்பாய் வெங்காயச் செய்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரீட்சார்த்தமாகப் பம்பாய் வெங்காயச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு அதனைப் பெருமளவில் செய்கைபண்ண முடியுமா என்பதை ஆராய்வதே இப்பரீட்சார்த்த திட்டத்தின் நோக்கமாகும். இது நல்லபலனை அளிக்குமென்றே கமத்தொழில்பகுதி நம்புகின்றது. ஈரவெங்காயத்தைப் போன்று இங்கே அதனையும் பெருந்தேசப்பரப்பில் செய்கைபண்ணலாமென நம்பப்படுகிறது.

### மாணவரும் சீசன் டிக்கற்றும்

பாடசாலே மாணவர்களுக்கான றெயில்வே "சீசன்" டிக்கற்றுகள் அந்தந்த றெயில்வே நிலேயங்களில உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வருகிற ஐப்பசிமாதம் 1ஆம்தேதியிலிருந்து அவர்கள் அந்தந்தறெயில்வே நிலேயங்களில அவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

### வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

கூப்பன் அரிசி, மற்றும் மிளகாய், மல்லி முதலிய உப உணவுப் பொருள்களைப் பொதுமக்களுக்குக் கஷ்டமின்றிவிற்பனே செய்யாத உத்தரவுபெற்ற தனியார் வியாபாரிகளின் "பெர்மிற்று"கள் உடனடியாக ரத்துச் செய்யப்படுமென்றும், அவர்கள்வசமுள்ள கூப்பன்கள் யாவும் அண்மையிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கு மாற்றப்படுமென்றும் வர்த்தக அமைச்சு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளது.

### விண்ணப்பிக்கும் கடைசித் தினம்

பாடசாலேகளிலே முதலாம் வகுப்பில் பிள்ளேகளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைப் பெற்ருேர் வருகிற ஐப்பசி மாதம 7ஆம் தேதிக்குமுன் பாடசாலே அதிபர்களிடம நேரில் கொடுத்து உடனடியாக அவர்களிடமிருந்து அவற்றிற்குரிய அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும், வசதியில்லாதோர் பதிவுத் தபாலிலும் அவைகளை அனுப்பலாம். ஐப்பசிமாதம் 7ஆம் தேதிக்குப்பின் கிடைக்கும விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலும் வருகிற தைமாதம் 31-ம் தேதியன்று ஆறுவயது பூர்த்தியடைந்த பிள்ளேகள் மட்டுமே முதலாம் வகுப்பில் சேர்க்கப்படுவார்கள்.

### ஆயிரம் பஸ் சாரதிகள்

பஸ்களில் போதிய இடமிருந்தும் தங்கள் பாதைகளிலே பிரயாணிகளை ஏற்றிச் செல்லத் தவறியதும், கோஅட்டவணைகளின்படி பஸ்களைக் கொண்டுசெல்லத் தவறியதும், செல்லவேண்டிய இடங்களின் பெயர்ப்பலகைகளைச் சரிவரப் போடத்தவறியதும், சில தரிக்குமிடங்களிலே பஸ்களை அதிகம் கூடிய நேரம் தாமதிக்கச்செய்ததும், குறித்தநேரத்துக்குமுன் தங்கள் டிப்போக்களுக்குத் திரும்பியதுமான பலவேறு குற்றங்களுக்குமாக ஆயிரவருக்கு மேற்பட்ட பஸ்சாரதிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையாலே சென்ற மாதம் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

### சரியான பெயர்ப் பலகைகள்

வீதிகளிலே பிழையான பெயர்ப்பலகைகளுடன் ஓடும் பஸ்களைக் கண்டுபிடிப்பதற்கெனப் போக்குவரத்துச் சபை ஓர்குழுவை நியமித்துள்ளது. தவருன பாதை இலக்கங்கள், பிழையான பெயர்ப்பலகைகள் இட்டுச் செல்வதை இக்குழு கண்டு பிடிக்கும் சபைப் பஸ்கள் யாவற்றிலும் அலுமீனியத்தினல் செய்யப்பட்ட பெயர்ப்பலகைகள் இடப்பட்டிருக்க வேண்டும். பஸ்களின் முனபுறத்திலும் இடப்பக்கத்திலும் பாதை இலக்கமும், இடமும் இருக்கவேண்டும், அவற்றின் பின்புறத்தில் பாதை இலக்கம மட்டும் இருக்கவேண்டும். இந்த ஒழுங்கை மீறும் சாரதிகள் மீது குற்றஞ்சுமத்தி நடவடிக்கை எடுக்கபபடும்.

### பனம்பழ "ஜாம்"

வடமாராட்சியிலே குடிசைக் கைத்தொழிலில் விருத்தியடைந்துவரும் கிராமங்களில் ஒன்ருன அம்பன் கிராமத்திலுள்ள மாதர்கள் தற்சமயம் பனம்பழத்திலிருந்து 'ஜாம்' செய்வதில ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள்பலாப்பழத்திலிருந்து செய்த ஜாமைக் காட்டிலும் பனம்பழஜாம் அதிகம்ருசியாக இருக்கின்றதாம்.

### இடைக்கால வரவு - செலவு

இன்றைய அரசாங்கத்தின் இரண்டாவது முறையான இடைக்கால வரவு–செலவுத் திட்டம் சென்ற 7ஆம திகதி சனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. வருகிற கார்த்திகைமாதம்முறையான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும்வரை இடையிலுள்ள காலத்திற்கான அரசாங்க செலவுகளைச்சமாளிப்பதற்கென இத்திட்டத்தில் 97கோடியே 22லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புரட்டாசியுடன் அரசாங்க நிதிவருடம் முடிவடைகின்றது. வருகிற ஐப்பசி 1ஆம் திகதி ஆரம்பமாகும். அதனுல் அடுத்த புதிய நிதிவருட வரவு செலவுத்திட்டம் நிறைவேறுகிறவரை ஏற்படும் செலவுகளைச் சரிப்படுத்துவதற்கே இந்த இடைக்காலவரவு–செலவுத்திட்டமாகும். இனிமேல் அரசாங்க நிதிவருடம் ஐப்பசி முதல் புரட்டாசி இறுதிவரைக்குப் பதில் தைமாதம் 1ஆம் திகதி முதல் மார்கழி 31ஆம் திகதிவரை ஆக்கப்படவுள்ளது. இதற்கும இந்த இடைக்கால வரவு–செலவுத் திட்டம் வசதியளிப்பதாகும்.

### வாகனம் பறிமுதலாகும்

வெளிநாட்டினரான வர்த்தகர்கள் பதுக்கி வைத்திருக்கும் பொருள்களை — அதாவது கள்ளக்கடத்தல் பொருள்களை அங்குமிங்குமாகக் கொண்டு செல்லப பாவிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்படும் லொறிகள் மற்றும் வாகனங்களைப் பறிமுதல்செய்ய அரசாங்கம் இப்போது தீர்மானித்துள்ளது. பதுக்கல் பொருள்களைக்கொண்டு செல்ல வாகனங்களை உதவவேண்டாமென்று லொறிச் சாரதிகளுக்கு ஒரு வேண்டுகோளும விடுக்கப்பட்டிருக்கிறது.

### தக்காளிப்பழ காலம்

யாழ்ப்பாணத்திலே தக்காளிப்பழகாலம் ஆரமபமாகியுள்ளது. அதனுல் விவசாயிகளிடமிருந்து நியாயமான விலேக்குத் தக்காளிப்பழங்களை வாங்குவதுபற்றி அரசாங்க விற்பனேப்பகுதி ஆலோசித்து வருகிறது. தனிப்பட்டவியாபாரிகள் தோட்டங்களுக்குச் சென்று விவசாயிகளை ஏமாற்றிக் குறைந்த விலேயிலே அவைகளைவாங்கிப் பிறவிடங்களுக்கு அனுப்பத் தொடங்கியுள்ளார்கள். இதுவிஷயம விற்பனேப் பகுதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவே, அது முந்திய வருடங்களிற்போல இம்முறையும தக்காளிப் பழங்களுக்கு நியாயமான விலே ஒன்றை நிர்ணயித்து இங்குள்ள இருசங்கங்கள் மூலம் அவைகளைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தலையங்கம்

தருதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# கடமையும் காருண்ணியமும்

அனுபவத்தைப்போல் அறிவூட்டவல்லது வேறொன்றும் இல்லை. ஏழைகளின் மத்தியில் வாழ்ந்தவர்கள்தான் வறுமையின் கொடுமையை அறிவர். ஆயிரக்கணக்கானவர் பசியும் பட்டினியும் கிடக்க, இன்னும் பலர் போதிய போஷாக்கும் வசதிகளும் இல்லாத காரணத்தால் அல்லற்பட, பொருளுடையோர் அதைப் பற்றிய அக்கறையின்றி தம் நலனே குறிக்கோளாக வாழ்வது ஏன்? தமக்கும் பிறமக்கள் மட்டில் கடமை உண்டு என்பதை மறந்துவிடுவது ஏன்? இக்கஷ்டங்களை எல்லாம் அவர்கள் நேரில் உணராதது தான்.

மக்கள் குலத்தின் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பது பொதுப்பட சமூகத்தினதும் தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். ஏதோ ஒரு சிறு தருமத்தைச் செய்துவிட்டு தான் கடமைக்கு மேற்பட்ட ஒரு பெரிய காருண்ணியச் செயலைச் செய்ததாகவும் அதற்குப் பரலோகத்தில் பெரிய சம்பாவனை அடையப் போவதாகவும் மனப்பால் குடிப்போர் பலர். ஏழையின் பசியைத் தீர்ப்பது ஒரு சரீர நற்கிரியைதான். ஆனல், அது எம் கடமைக்கு அப்பாற்பட்டதல்ல. எமது தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்தபின் ஏதாவது மிஞ்சினல் அதை தானதருமத்திற் செலவிடுவோம் என்பது வெறும் அபத்தம். அது ஒரு போதும் நடைபெறப் போவதுமில்லை. ஒருவர் துன்பப்படும் தன் சகோதரனுக்கு உதவ வேண்டுமானல் தன்னை ஒறுத்துத்தான் உதவ வேண்டும். தமது உணவில், உடையில், பொழுதுபோக்குகளில் ஆடம்பரப் பொருள்களில் செலவிடும் பணத்தைக் குறைத்து அதை ஓர் ஏழையின் துயர்தீர்க்க பயன்படுத்தினல் அதுவே உண்மையான கொடை. சகோதர அன்போடு செய்யப்பட்டது என்று கூறலாம்.

இவ்வாறு செய்வதற்கு உண்மையான கிறிஸ்தவ அன்பு தேவை. உலக பாராட்டுக்காக அல்லது எமது சொந்த மனத்திருப்திக்காக இதை நாம் செய்ய முடியாது. இயற்கைக்கு மேலான ஒரு சக்தி எம்மைத் தூண்டவேண்டும். அதுதான் கிறிஸ்தவ அன்பு. கிறிஸ்துநாதரின் அன்பிலே வேரூன்றிய பிறரன்பு. ஆத்தும சரீரம் உள்ள இந்த ஏழைகள், தாழ்த்தப்பட்டோரிடம் இறைவனின் சாயலை நாம் காணவேண்டும். கிறிஸ்தவ அன்பு என்பது எல்லோரிடத்திலும், முக்கியமாக துன்புறும் ஏழைமக்களிடம் கிறிஸ்துநாதரைக் காண்பது. கிறிஸ்துநாதர்தான் துன்பப்படுகின்றார். எமது உதவியை வேண்டுகின்றார். இதைத் தம் சொந்த வார்த்தைகளில் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

ஏழை மக்களுக்கு உதவுவதற்கு எத்தனையோ வழிகளுண்டு. உடனடியான கஷ்டங்களை அவ்வேளைக்குத் தீர்ப்பது மட்டுமல்லாமல், அவர்கள் வாழ்வு மலர, நிரந்தரமான ஏற்பாடுகளை, திட்டங்களை வகுத்து அவர்கள் பிறர் கையை நோக்காது தம் கையே தமக்குதவி என வாழக்கூடிய ஒரு நிலையை உண்டாக்குவது தான் இலட்சியமானது. இந்த இலட்சிய நிலையை அடைய வேண்டுமென்றல் ஒருவர் தமது பொருளை மட்டுமல்ல, தமது ஆற்றலையும் நேரத்தையும் இக்கருத்துக்காகச் செலவிட வேண்டிவரும். பொதுநிலையினர் கிறிஸ்துவுக்கு சாட்சி பகர மேற்கொள்ளவேண்டிய அப்போஸ்தலத்துவ ஊழியங்களுள் இது தலைசிறந்ததாகும். ஏனெனில், இதன் மூலம் கிறிஸ்துவின் பிரசன்னத்தையும் அன்பையும் பிறர் உணர்கின்றனர். உணவுக்கு அங்கலாய்க்கும்நிலை மாறின பின்புதான் மனிதன் மீட்புச் செய்திக்குச் செவிசாய்க்கும் மனோநிலையை அடைவான். அந்த உணர்வையும் மனோபாவத்தையும் உருவாக்குவதற்கு ஏழை மக்களின் இன்றைய கஷ்டங்கள் தீர்த்து வைக்கப் படவேண்டும்.

செபஞ் செய்யும்போது நல்ல மனதின்றி வெறும் வார்த்தைகள்மட்டும் இருப்பதை விட, வார்த்தைகள் இன்றி நல்ல மனதுமட்டும் இருப்பது சாலச்சிறந்ததாகும். தினமும் பிரார்த்தனை செய்யும்போது ஒப்பிடமுடியா ஒன்றோடு இணைகிறன் மனிதன்.

— மகாத்மாகாந்தி

# சீனக்குருவரின் அந்தரங்க இராசிய சேவை

வத்திக்கானுக்கும், செஞ்சீனவுக்குமிடையே இராசிய உறவுகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் சிலகாலமாகப் புலப்படுகின்றன. இன்றுநேற்று இது உண்டானதல்ல. அமெரிக்க ஜனதிபதி நிக்சன் அவர்கள் செஞ்சினவுக்கு விஜயஞ்செய்யப் போவதாகத் திடீரெனச் செய்தி வெளியிடுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பே இதுதொடங்கியது.

இதற்குப் பொறுப்பானவர் யார்? பரீஸ்நகரிலே திருப்பணியாற்றுகின்ற தாழ்மையான ஒரு சீனக்குருவாகிய வண. லூயிஸ் வே ரிசிங் சிங் சுவாமியாரே. சீனதேச ஷாங்காய் நகரில்பிறந்த 68வயதுடையவரான இவர் பரீஸ்பட்டணத்தின் புறநகரிலுள்ள புனித மிக்கேல் ஆலய பங்கின் விசாரணைக் குருவாய் இருந்து வருகின்றார்.

கருதினல் திசரான் ஆண்டகையாலே குருத்துவாபிசேகஞ் செய்யப்பெற்ற வண. வே சுவாமியார் அங்கு புனித மிக்கேல் கல்லூரியின் அறை ஒன்றிலே — இதிகாசம், பாஷை, திருமறைக்கலை சம்பந்தப்பட்ட நூல்கள்பல மலைபோலப் பாதிப்பக்கமும் குவிந்துள்ள அறை ஒன்றிலே வசிக்கின்றார்.

அவருடைய சாய்ந்த மேசையின்மீது இரு பிரதிமைப் படங்கள் அழகுறக் காட்சியளிக்கின்றன. அவற்றிலே வலது புறமாகச் சின்னப்ப பாப்பரசரின் படமும், இடது புறமாகச் சீனத் தலைவர் மாவோ-ரிசி-துங்கின் படமும் இருக்கின்றன. சீனவிலே பிரான்சிய அரசியல் தூதுகள் பற்றியதே இவர்பல்கலைக் கழகப்பட்டம் பெறுவதற்காக எழுதிய நீண்ட விபரமான வியாசத்தின் விஷயமாகும். இஃது 650 பக்கங்கள்கொண்ட ஒருபிரபந்தமாகும். இதனை எழுதிமுடிக்க இவருக்குப் 12 ஆண்டுகள் பிடித்தன. இப்போது திருச்சபைக்கும், சீனவுக்கு மிடையிலுள்ள உறவுகள்பற்றி இவர்ஒரு புத்தகம் எழுதி முடித்திருக்கின்றார்.

"பல்லோர் உள்ளங்களையும் ஈர்த்துகொண்டிருக்கும் ஒரு மர்ம புருஷரான இந்தச் சீனக்குருவரின் அந்தரங்க விருத்தாந்தங்கள் பற்றிய செய்திகள் இப்பொழுது அதிகமாக எமக்குக் கிடைக்கின்றன; பாப்பரசருக்கும், சீனத் தலைவருக்குமிடையே இராசியஉறவுகளை ஏற்படுத்துவது சம்பந்தமாய் இவர் கலந்துரையாடி வருகிறார்" என்று வத்திக்கானும் இப்பொழுது ஒப்புக் கொள்ளுகின்றது.

இவர் வீரத்துவம் வாய்ந்தவர். தமது 28ஆம் வயதிலே சிங்கப்பூரிலிருந்து ரோமைநகருக்குக் கால்நடையாக நடந்து சென்றார். இதற்கு அவருக்கு இரண்டுவருடங்கள் பிடித்தன. சீனவுடன் தாம் கொண்டுள்ள தொடர்புகள் பற்றிய அறிக்கைகளைக் காலந்தோறும் கிரமமாக வத்திக்கான் இராச்சியமந்திரி காரியாலயத்திற்குத் தாம் அனுப்பி வருவதாகவும், ஐக்கியநாடுகள்சபையில் செஞ்சின அனுமதிக்கப் படுமுன்னரே சீனத் தலைவர் மாவோவுடன் உண்மையானபேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்பதாகவும் சுவாமியார் கூறுகின்றார்.

## அச்சுப் பிரசுர வாரம்

சிலாப மேற்றிராசனத்திலே இவ்வருடம் கத்தோலிக்க பிரசுரவாரம் புரட்டாசி மாதம் 26-ம்திகதி தொடக்கம் ஐப்பசி 3-ம் திகதிவரையும் நடைபெறுமென அம் மேற்றிராசன துணைமேற்றிராணியராகிய பிராங் மார்க்கஸ் பெர்ணுந்து அடிகளார் அம்மேற்றிராசன குருமார் யாவருக்கும் அறிவித்திருக்கின்றார்.

## மரியாயின் சேனை

உலகிலே மரியாயின்சேனை வேறொன்றாத கத்தோலிக்க மேற்றிராசனங்கள் இல்லையென்று சொல்லலாம். எங்குமே அது தொண்டாற்றி வருகின்றது. சேனையின் நடவடிக்கைகள் தொடங்கி 50 வருடமுடிவு கண்டதையிட்டு எங்கும் பெருமகிழ்ச்சி காணப்பட்டிருக்கின்றது. அயர்லாந்து தேசத்திலே டப்ளின் நகரிலே இதை முதன் முதல் தொடக்கி வைத்த பெரியார் பிராங்க் டவ் அவர்களுக்கு உலகின் பல பாகங்களிலுமிருந்து நன்றி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

## சேனை பொன்விழாப் பொருட்காட்சி

உலகில் மரியாயின்சேனை ஆரம்பமாகி 50ஆண்டுகளின் நிறைவையொட்டிய பொன்விழா கொண்டாட்டங்களின் விசேட சிறப்பு நிகழ்ச்சியாக ஒரு பொருட்காட்சி ஐப்பசி 17-ம், 18-ம் தேதிகளில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற இருக்கின்றது. இப் பொருட்காட்சியில் துறவற, இல்லற அப்போஸ்தல அழைத்தல் பற்றிய அம்சம் பிரதான இடம்பெறுகிறது. யாழ். மேற்றிராசனம் அடங்கலுமுள்ள மரியாயின் சேனையாளர் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

## பூசை வழிகாட்டி

### புரட்டாசி — 1971

26. ஞாயிறு : ஆண்டின் 26-ம் ஞாயிறு [ப]
1-ம் வாசகம்: ஆமோ, 6: 1, 4—7.
2-ம் வாசகம்: 1 திமோ. 6: 11—16.
சுவிசேஷம்: லூக். 16: 19—31.

27. திங்கள் : நாள் பூசை [ப]
வாசகம்: சக்காரி 8: 1—8
சுவிசேஷம்: லூக். 9: 46—50.

28. செவ்வாய் : நாள் பூசை [ப]
வாசகம்: சக்காரி. 8: 20—23.
சுவிசேஷம்: லூக். 9: 51—56.

29. புதன் : புனித மிக்கேல், கபிரியேல் [வெ]
வாசகம்: தானியேல் 7: 9—10, 13—14.
சுவிசேஷம்: அரு. 1: 47—51.

30. வியாழன் : புனித எரோனிமுஸ் [வெ]
வாசகம்: 2 திமோ. 3: 14—17.
சுவிசேஷம்: மத். 23: 8—12.

### ஐப்பசி — 1971.

1. வெள்ளி : நாள் பூசை [ப]
வாசகம்: பாரூக் 1: 15—22.
சுவிசேஷம்: லூக். 10: 13—16.

2. சனி புனித காவல் தூதர்கள் [வெ]
வாசகம்: யாத். 23: 20—23.
சுவிசேஷம்: மத். 18: 1—5, 10.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 25-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்." யாழ்ப்பாணம். தொலைபேசி: 300; தாபிதம்: 1875.